AN 20/6/24

ADDITIONAL CONTROLLER OF EXAMINATIONS AU CHENNAI 600 025

வரிசை எண் | | | | | | | | | | |

அண்ணா பல்கலைக்கழகம் (பல்கலைக்கழக துறைகள்)

இ. பொ (முழு நேரம்) – இறுதி பருவத் தேர்வுகள், ஏப்ரல் / மே 2024

**MA5158 & பொறியியல் கணிதம் - I**

(விதி 2019)

மொத்தம் : 100 மதிப்பெண்கள்

காலம் : 3 மணிகள்

**பகுதி - அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)**

**(அனைத்து வினாக்களுக்கும் விடையளி)**

| வி. எண் | வினாக்கள் | மதிப் பெண் கள் | CO | BL |
|---|---|---|---|---|
| 1. | $\begin{pmatrix} 7 & 4 & 4 \\ 4 & -8 & -1 \\ 4 & -1 & -8 \end{pmatrix}$ என்ற அணியின் ஒரு ஐகன்மதிப்பு $-9$ எனில் மற்ற ஐகன்மதிப்புகளைக் காண்க. | **2** | 1 | L1 |
| 2. | $\lambda(x^2+y^2+z^2)+2xy-2xz+2zy$ ஆனது நேர்ம வரைவுள்ளது எனில் $\lambda$-ஐ\தீர்மானிக்க. | **2** | 1 | L2 |
| 3. | $\lim_{x\to 0} x^2 \sin\left(\frac{1}{x}\right)$ ஐக் காண்க. | **2** | 2 | L2 |
| 4. | $y = x^4 - 6x^2 + 4$ என்ற வளைகோட்டின் தொடுகோடு கிடைநிலையில் உள்ள புள்ளிகளைக் காண்க. | **2** | 2 | L1 |
| 5. | $u = \frac{y^2}{x},\ v = \frac{x^2}{y}$ எனில் $\frac{\partial(u,v)}{\partial(x,y)}$-ஐக் காண்க. | **2** | 3 | L1 |
| 6. | $f(x,y) = x^2 + y^2 + 6x + 12$ என்ற சார்பின் நிலைப்புள்ளிகளைக் காண்க. | **2** | 3 | L2 |
| 7. | $y(x) = \int_1^{e^x} \log t\, dt$-ன் வகைக்கெழுவைக் காண்க. | **2** | 4 | L2 |
| 8. | $\int_2^{\infty} \frac{2+\sin x}{x-1}\, dx$ என்ற தொகையீடு சுருங்குகிறதா? | **2** | 4 | L1 |
| 9. | மதிப்பிடுக $\int_0^2 \int_0^{x^2} e^{\frac{y}{x}}\, dy\, dx$. | **2** | 5 | L2 |
| 10. | $\int_{-1}^{1} \int_{-\sqrt{1-x^2}}^{\sqrt{1-x^2}} \int_0^1 dz\, dy\, dx$ இம்முத்தொகையீடு ஒரு கனஅளவைக் குறிக்கிறது எனில் அந்த திண்மத்தை வரையறுக்க. | **2** | 5 | L1 |

**பகுதி – ஆ (5 x 13 = 65 மதிப்பெண்கள்)**

| வி. எண் | | | வினாக்கள் | மதிப் பெண் கள் | CO | BL |
|---|---|---|---|---|---|---|
| 11. | a. | | செங்குத்து உருமாற்றத்தின் மூலம் இருபடி வடிவத்தை நியமன வடிவமாக மாற்றுக $6x^2+3y^2+3z^2-4xy-2yz+4xz$. | **13** | 1 | L3 |
| | | | **அல்லது** | | | |
| | b. | i. | $A = \begin{pmatrix} -2 & 2 & -3 \\ 2 & 1 & -6 \\ -1 & -2 & 0 \end{pmatrix}$ இவ்வணியின் ஐகன் மதிப்புகள் மற்றும் ஐகன் திசையிகளைக் காண்க. | **7** | 1 | L3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ii. | காலே ஹாமில்டன் தேற்றத்தைப் பயன்படுத்தி $\begin{pmatrix} 2 & -1 & 2 \\ -1 & 2 & -1 \\ 1 & -1 & 2 \end{pmatrix}$ இவ்வணியின் தலைகீழ் காண்க. | **6** | 1 | L 4 |
| | | | | | | |
| 12. | a. | i. | $[0,2]$ என்ற இடைவெளியில் $f(x) = x^3 - x$ என்ற சார்பு சராசரிப்பெறுமானத்தேற்றத்தின் கருதுக்கோள்களை பூர்த்தி செய்கிறதா என சோதிக்க. மேலும் சராசரிப்பெறுமானத்தேற்றத்தை நிறைவு செய்யும் எல்லா எண்களையும் $c$ கண்டறிக. | **7** | 2 | L 3 |
| | | ii. | $[-1,2]$ என்ற இடைவெளியில் $f(t) = t\sqrt{4-t^2}$ என்ற சார்பின் தனிப்பெரும, சிறும மதிப்புகளைக் காண்க. | **6** | 2 | L 4 |
| | | | **அல்லது** | | | |
| | b. | i. | $f(x) = x^4 - 2x^2 + 3$ சார்பானது எந்தெந்த இடைவெளிகளில் ஏறுமுகமாக அல்லது இறங்குமுகமாக உள்ளது எனக் காண்க. மேலும் முதல் வகையீட்டு சோதனையின் மூலம் $f$-ன் இடஞ்சார்ந்த பெரும, சிறும மதிப்புகளைக் காண்க. | **7** | 2 | L 3 |
| | | ii. | $x^4 + y^4 = 16$ எனில் $y''$-ஐக் காண்க. | **6** | 2 | L 4 |
| | | | | | | |
| 13. | a. | i. | $x^3 + y^3 + xy^2$ என்ற சார்பின் டெய்லர் தொடர் வரிசையினை $(x-1)$ மற்றும் $(y-2)$-ன் அடுக்குகளில் இரண்டாம் படிவரை விரித்தெழுதுக. | **7** | 3 | L 3 |
| | | ii. | $x = r\sin\theta\cos\phi,\quad y = r\sin\theta\sin\phi,\quad z = r\cos\theta$ எனில் $\frac{\partial(x,y,z)}{\partial(r,\theta,\phi)}$-ஐக் காண்க. | **6** | 3 | L 4 |
| | | | **அல்லது** | | | |
| | b. | i. | $f(x,y) = x^4 - y^4 - 2x^2 + 2y^2$-ன் இடஞ்சார்ந்த பெரும, சிறும மதிப்புகளைச் சோதிக்க. | **7** | 3 | L 3 |
| | | ii. | $u = x^3 - 3x^2y - 2y^3$ என்ற சார்பின் ஆய்லர் தேற்றத்தை சரிபார்க்க. | **6** | 3 | L 4 |
| | | | | | | |
| 14. | a. | i. | பகுத்துத் தொகையிடல் முறையில் மதிப்பிடுக $\int e^{ax}\cos bx\,dx$. | **7** | 4 | L 3 |
| | | ii. | மதிப்பிடுக $\int_0^{\frac{\pi}{2}} \cos^5 x\,dx$. | **6** | 4 | L 4 |
| | | | **அல்லது** | | | |
| | b. | i. | மதிப்பிடுக $\int \frac{x}{\sqrt{x^2+x+1}}dx$. | **7** | 4 | L 3 |
| | | ii. | மதிப்பிடுக $\int \frac{\sqrt{9-x^2}}{x^2}dx$. | **6** | 4 | L 4 |
| | | | | | | |
| 15. | a. | i. | தொகையிடல் வரிசையை மாற்றி மதிப்பிடுக $\int_0^1\int_{x^2}^{2-x} xy\,dy\,dx$. | **7** | 5 | L 4 |
| | | ii. | $r = a\cos\theta$ என்ற வட்டதின் வெளிபுறமும் $r = 2a\cos\theta$ என்ற வட்டதின் உட்புறமும் உள்ள பகுதியின் பரப்பளவை இரட்டை தொகையிடல் முறையில் காண்க. | **6** | 5 | L 3 |
| | | | **அல்லது** | | | |

MINATIONS ★

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | b. | i. | மதிப்பிடுக $\int_0^a \int_{\sqrt{ax-x^2}}^{\sqrt{a^2-x^2}} \frac{dy\,dx}{\sqrt{a^2-x^2-y^2}}$. | **7** | 5 | L4 |
| | | ii. | $x^2+y^2=a^2$ என்ற வட்டதிற்கும் $x+y=a$ என்ற கோட்டிற்கும் இடைப்பட்ட சிறிய பகுதியின் பரப்பளவை இரட்டை தொகையிடல் முறையில் காண்க. | **6** | 5 | L3 |

**பகுதி – இ (1 x 15 = 15 மதிப்பெண்கள்)**
**(வினா எண் 16 விருப்பத் தெரிவற்றது)**

| வி. எண் | | | வினாக்கள் | மதிப் பெண் கள் | **CO** | **BL** |
|---|---|---|---|---|---|---|
| 16. | a. | i. | $3\times3$ சமச்சீர் அணி $A$-ன் ஐகன் மதிப்புகள் $2,3,6$-க்கான ஐகன் திசையிகள் முறையே $(1\ 0\ -1)^T$, $(1\ 1\ 1)^T$ மற்றும் $(1\ -2\ 1)^T$ ஆகும். அணி $A$-ஐக் காண்க. | **7** | 1 | L6 |
| | | ii. | மேற்பரப்பு 108 ச.செ.மீ உள்ள அதிக கொள்ளளவுள்ள மேல்புறம் திறந்த பெட்டியின் பரிமாணங்களைக் காண்க. | **8** | 4 | L5 |

ADDITIONAL CONTROLLER OF EXAMINATIONS ★ AU CHENNAI 600 025